**கண்டி மாநகர சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கண்டி மாநகர சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அத்தியாயம்) 219 ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளளவாறு கண்டி மாநகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.
இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுக்ள மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மாநகர சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம், இவ் அறிக்கையில் 1.6.1(அ) இன் அவதானிப்புகள் தவிர முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | கடந்த ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது அறிக்கையில் சுட்டிக்காட்டிய 1.3.1 (ஆ), (இ), (ஈ) மற்றும் (ஊ) கொண்ட கணக்கீட்டு குறைபாடுகளை சரிசெய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டில் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கிறேன். | நிதிக்கூற்றுக்களில் இத்தவறுகளை சரிசெய்ய வேண்டியமை |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியில் நிலையான வைப்புக்களின் பெறுமதி மற்றும் வட்டி வருமானம் முறையே ரூபா 21,928,168 மற்றும் ரூபா 776,712 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. | எதிர்காலத்தில் பெற வேண்டிய வட்டியை கடன்படுனராக குறிப்பிடுவதாகவும் எதிர்காலத்தில் சரிசெய்வதாகவும் அறிவிக்கிறேன். | சரியாக கணக்கு வைக்க வேண்டியமை |
| (இ) | கடந்த 03 ஆண்டிகளினுள் ரூபா 2,031,295,949 ஆன அபிவிருத்தி செலவு மேற்கொண்டு நிர்மாணித்த 27 கட்டிடங்கள் மற்றும் அதற்கு முன்னைய ஆண்டு நிர்மாணித்த 201 கட்டிடங்களை மீண்டும் மதிப்பிட்டு, கணக்கீடு செய்திருக்கவில்லை. | மதிப்பீடு செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறவிக்கிறேன். | மதிதப்பீடு செய்து கணக்கீடு செய்ய வேண்டியமை |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | வங்கியிணக்க கூற்றுக்களில் நேரடி செலவு மற்றும் நேரடி வரவாக காட்டப்படும் கூட்டுத்தொகை ரூபா 40,195,822 ஆன பெறுமதிக்குரிய கொடுக்கல் வாங்கல்களை இனங்கண்டு கணக்கீடு செய்திருக்கவில்லை. | பரீட்சித்து, முன்நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். | நேரடி செலவு மற்றும் நேரடி வரவுகளை இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டியமை |

**1.6.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 08 கணக்கு விடயங்களிற்குரிய நிதிக்கூற்றுக்கள் பிரகாரம், மீதி மற்றும் அட்டவணைகள் பிரகார மீதிக்கிடையில் ரூபா 383,427,924 ஆன வித்தியாசம் காணப்பட்டது. | எதிர்காலத்தில் பரிசோதித்து சரசெய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். | பயன்பாட்டு பதிவேடுகளை சரியாக தயாரிக்க வேண்டியமை |

**1.6.3 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட 04 கணக்கு விடயங்களிற்குரிய கூட்டுத் தொகை ரூபா 202,844,384 இற்கான பண்டக கணிப்பீட்டறிக்கை, இறுப்பு அட்டவணை மற்றும் பேரேட்டு மீதிகள் ஆகிய தகவல்கள் சமர்பிக்கப்படாததால், கணக்காய்வின் போது, திருப்திகரமாக ஒப்பாய்வு செய்ய முடியாதிருந்தது. | எதிர்காலத்தில் இவ்வாறான தாமதங்கள் ஏற்படாதவாறு தேவைவான நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். | தேவையான எழுத்துமூல சான்றுகளை கணக்காய்விற்கு சமர்பிக்க வேண்டியமை |

## 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | மாநகர சபை கட்டளை சட்டம் | | | |
| (i) | 127(3) பிரிவு | இணக்கப்பாட்டு சான்றிதழ் பெற்றுக் கொள்ளாது வசித்தன் மீது 10 வியாபார அலகுகளிலிருந்து 2018 ஆண்டு முதல் அறவிட வேண்டிய ரூபா 1,878,500 ஆன தண்டப்பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஆலோசனை கோரி உள்ளூராட்சி ஆணையாளரிற்கு கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ள தாக அறிவிக்கிறேன். | மாநகர சபை கட்டளை சட்ட பிரிவின் பிரகாரம் செயற்பட வேண்டியமை |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | இலக்கம் 272 – 6(ஈ) அதிகாரம் பிரகாரம், 2002 ஆகஸ்ட் 09 திகதி கண்டி மாநகர சபை அங்கீகரித்த துணை விதிகள் கோவையின் iv ஆம் பிரிவின் (01) ஆம் பந்தி | அனுமதிப்பத்திரம் பெறாது நித்தவல விளையாட்டரங்கு உற்பகுதியில் ரூபா 2,567,440 ஆன கட்டணம் அறவிடப்பட வேண்டிய 43 அறிவித்தல் பலகைகள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. | வருமான செலவு செயற்குழு கூட்டத்தில் இது தொடர்பாக தீர்மானமொன்று எடுப்பதாக அறிவிக்கிறேன். | துணை விதிக் கோவைக்கு ஏற்ப செயற்பட வேண்டியமை |
| (ஆ) | தாபன விதிக் கோவையின் XXIV அத்தியாயம் மற்றும் 2004 ஒக்டோபர் 11 திகதிய இலக்கம் 118 கொண்ட தேசிய வரவு செலவு சுற்றறிக்கை | சேவையை நிறுத்திய மற்றும் ஓய்வுபெற்ற 05 ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 535,848 ஆன கடனை அறவிட மற்றும் இடமாறிச் சென்ற 332 ஊழியர்கள் தொடர்பாக ரூபா 8,670,215 ஆன கடன் மீதிகளை தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில், கடனை அறவிட நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். | கடன் மீதிகளை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டியமை |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான மாநகர சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 615,809,729 தொகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 609,888,349 ஆனது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | வீதவரி மற்றும் குத்தகை | | |
| | ஒரு அலகிலிருந்து ரூபா 100,000 இனை விஞ்சிய 156 அலகுகளிலிருந்து அறவிட வேண்டிய கூட்டுத் தொகை ரூபா 36,768,082 உள்ளடங்களாக மீளாய்வாண்டு இறுதியில் அறவிட வேண்டிய ரூபா 256,537,585 ஆன வீதவரி குத்தகை அறவிடப்படவில்லை. | நிலுவை அறவிட கடிதம் அனுப்புதல், களத்திற்கு செல்லல், பிரசார நடவடிக்கை மேற்கொள்ளல் போன்றவற்றை மேற்கொள்வதாக அறிவிக்கிறேன். | அறவிட வேண்டிய வருமானத்தை சேகரிக்க வேண்டியமை |
| (ஆ) | காணி மற்றும் நீர் கட்டணம் | | |
| | மீளாய்வாண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய காணி மற்றும் நீர் கட்டணம் முறையே ரூபா 27,821,517 மற்றும் ரூபா 132,393,876 அறவிடப்பட்டிருக்கவில்லை. | காணி மற்றும் நீர் கட்டணத்தின் ஒரு பகுதி அறவிடப்பட்டுள்ளதுடன், நீர் துண்டிப்பு வேலைத் திட்டத்தை செயற்படுத்தியுள்ளதாக அறிவிக்கிறேன். | அறவிட வேண்டிய வருமானத்தை சேகரிக்க வேண்டியமை |

(இ) கடை வாடகை

| | | |
|---|---|---|
| (i) 2019 ஆண்டு முதல் வியாபார சந்தைகளை குத்தகை வழங்குவதனூடாக மற்றும் கடையறைகளிற்கான டெண்டர் கட்டணமாக அறவிட வேண்டிய ரூபா 70,029,564 அறவிடப்பட்டிருக்கவில்லை. | புதிய மதிப்பீட்டின் மீது மற்றும் கொவிட் தொற்று நிலைமை காரணமாக பிரயாணக் கட்டுப்பாடு, ஊரடங்கச் சட்டம் அமுல்படுத்திய காரணத்தால், நிலுவை அதிகரித்துள்ளதாக அறிவிக்கிறேன். | அறவிட வேண்டிய வருமானத்தை சேகரிக்க வேண்டியமை |
| (ii) 2019 ஆண்டு முதல் மெனிக்குபுர வியாபார சந்தையின் கடையறைகளிற்காக கிடைக்க வேண்டிய ரூபா 21,768,049 ஆன கடை வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவீடு தொடர்பாக கண்டி உச்ச நீதிமன்றத்தின் ரீட் இலக்கம் 14/9 கொண்ட வழக்கு விசாரிக்கப்படுவதுடன், எதிர்காலத்தில் சட்ட நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். | அறவிட வேண்டிய வருமானத்தை சேகரிக்க வேண்டியமை |

(ஈ) வியாபார உரிமையை குத்தகை வழங்கல்

| | | |
|---|---|---|
| (i) பேராதெனிய வாடிவீட்டை குத்தகை வழங்குவதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபையினூடாக, மாநகர சபைக்கு அறவிட வேண்டிய கூட்டுத் தொகை ரூபா 8,132,601 ஆன வாடகை பணத்தை அறவிடப்பட்டிருக்கவில்லை. | அரச நிறுவனமொன்று ஆகையால், வாடிவீட்டு முகாமையாளருடன் கலந்துரையாடி, பிரச்சினையை தீர்த்துக் கொள்ளவுள்ளதாக அறிவிக்கிறேன். | அறவிட வேண்டிய வருமானத்தை சேகரிக்க வேண்டியமை |
| (ii) மெனிக்கும்புர சில்லறை வியாபார கட்டிடத் தொகுதி | | |
| 2000 ஆண்டு ரூபா 60,992,475 செலவில் நிர்மாணித்த மெனிக்கும்புர வியாபார கட்டிடத் தொகுதியில் 03 கடையறைகள் உடன்படிக்கை இன்றி குத்தகை வழங்கியிருந்ததுடன், தற்போதளவில் அனைத்து கடையறைகளிற்கும் புதிய மதிப்பீட்டின் மீது புதிய உடன்படிக்கை கைசாத்திட்டிருக்கவில்லை. | உடன்படிக்கை கைச்சாத்திடுமாறு குத்தகைதாரர்களுக்கு அறவித்துள்ளதாக அறிவிக்கிறேன். | புதிய உடன்படிக்கை கைசாத்திட நடவடிக்கை எடுக்க வேண்டியமை |

(உ) நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் கிடைக்க வேண்டியதான முத்திரைக் கட்டணம் ரூபா 145,535,036 அறவிடப்பட்டிருக்கவில்லை. | உள்ளூராட்சி ஆணையாளரிற்கு அட்டவணை சமர்பித்த பின்னர் மத்திய மாகாண பிரதான செயலாளரிடமிருந்து மீள் நிரப்பிக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். | பெற வேண்டிய வருமானத்தை அறவிட வேண்டியமை |

(ஊ) ஏனைய வருமானங்கள்

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டு இறுதியில் வாகன தரிப்பிட குத்தகை வழங்கல், வீதி குத்தகை வழங்கல் மற்றும் அறிவித்தல் பலகைகளுக்காக, முறையே அறவிட வேண்டிய ரூபா 200,567,833, ரூபா 12,705,571 மற்றும் ரூபா 34,935,818 அறவிடப்பட்டிருக்கவில்லை. | இந்நிலுவை தண்டப்பணத்தை அறவிட கண்டி உச்ச நீதிமன்றத்தில் வழக்கு விசாரிக்கப்படுவதாக அறிவிக்கிறேன். | அறவிட வேண்டிய வருமானத்தை சேகரிக்க வேண்டியமை |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சபையின் கருத்துரைகள்** | **சிபார்சுகள்** |
|---|---|---|---|
| (அ) | கொஹாகொட சம்பத் பியச மற்றும் பிளாஸ்டிக் மீள்சுழற்சி மத்திய நிலையத்தில் காணப்பட்ட பௌதீக இருப்பு மற்றும் தொடர்புடைய பதிவேடு 2020 ஆகஸ்ட் 21 திகதி பரிசோதனையின் போது, ரூபா 1,478,444 விற்பனை பெறுமதியான 18,955 கிலோ கிராம் பிளாஸ்டிக் கட்டிகள் மற்றும் ரூபா 1,192,312 பெறுமதியான 95,385 கிலோ கிராம் காட் போட்களின் பற்றாக்குறை காணப்பட்டன. | குறிப்பிடுகையில், தாமதத் தவறு ஏற்பட்டுள்ளதாக மற்றும் இதனை விசாரிக்க குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். | சரியாக புத்தகங்களை பராமரித்தல் மற்றும் வேறு அலுவலர் ஒருவர் புத்தகங்களை மேற்பார்வை செய்ய வேண்டியமை |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி அறவிடப்படாது 05 ஆண்டு காலமொன்றை விஞ்சியிருந்த அறிவித்தல் பலகை கட்டணம் மற்றும் விபத்திற்குள்ளான வாகங்கள் தொடர்பாக கிடைக்க வேண்டிய ரூபா 13,306,602 வை அறவிட மற்றும் ஆண்டு 01 இற்கும் 05 இற்குமிடையிலான கால வீச்சளவை விஞ்சியுள்ள ரூபா 109,495,156 ஆன வாடகை, காணிக் குத்தகை மற்றும் வாகன கட்டணத்தை அறவிட போதியளவான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | விரைவில் பதில் வழங்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். | கிடைக்க வேண்டிய மீதிகளை அறவிட வேண்டியமை |
| (இ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி 05 ஆண்டு காலமொன்றை விஞ்சியிருந்த கூட்டுத் தொகை ரூபா 50,443,103 ஆன செலுத்தாத சம்பளம் மற்றும் படிகள், வழங்கல் கடன்கொடுனர் | முற்செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்க்க வேண்டியமை |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் மின்சாரத்தை சுவீகரிக்கும் போது, ஏற்பட்ட கடன்கொடுனர் மீதியை தீர்க்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | சபை அதிகார எல்லையில் காட்சிப்படுத்தியிருந்த 03 டிஜிடல் அறிவித்தல் பலகைகளிற்காக 2013 ஆண்டு முதல் 2019 ஆண்டு வரையான காலத்திற்காக அறவிட வேண்டிய ரூபா 988,358 தொகையை அறவிட சட்ட நடவடிக்கை எடுத்துள்ள போதும், அறவீடு செய்திருக்கவில்லை. | அறிவித்தல் பலகைகளை அகற்ற மற்றும் மின்சாரத்தை துண்டிக்க பொறியியலாளர் அறிவூட்டப்பட்டுள்ளதுடன், நீதிமன்ற நடைமுறையொன்று செயற்படுவதாக அறிவிக்கிறேன். | கட்டணம் செலுத்தாத அறிவித்தல் பலகைகளிற்காக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டியமை |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| தலதா வீதியில் அமைந்துள்ள 74 இலக்க இஸ்தானத்தில் அமைந்துள்ள நகரசபை காணியை குத்தகை வழங்கல் | | |
| முறையான டென்டர் நடைமுறை மற்றும் சட்டரீதியான உடன்படிக்கை இன்றி 2007 ஆண்டு முதல் வெளித்தரப்பினர் ஒருவரினால் பயன்படுத்தும் மேல் குறிப்பிடும் நகர காணியின் அபிவிருத்தியற்ற மதிப்பீட்டு பெறுமதி ரூபா 55,000,000 என 2015 ஆகஸ்ட் மாதம் மதிப்பிட்டுள்ள போதும், மீளாய்வாண்டு இறுதியளவிலும் எவ்வித பணமும் அறிவிட அல்லது உடமையை சுவீகரிக்க அல்லது சட்ட நடவடிக்கை எடுக்கவேனும் சபை போதிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சட்ட நடவடிக்கைகளுக்கு தேவையான ஆவணங்களை உள்ளூராட்சி ஆணையாளரிற்கு சமர்பித்துள்ளதாக அறிவிக்கிறேன். | சட்டரீதியான முறைமையொன்றின் பிரகாரம், சொத்துக்களை குத்தகை வழங்க வேண்டியமை |

**3.4 ஒப்பந்த நிருவகத்திலுள்ள முறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| பாதை நிர்மாணிப்பதற்கான மதிப்பீடு தயாரிக்கும் போது, அதற்குரிய வீதங்கள் (HSR) பயன்படுத்தப்பட வேண்டிய போதும், முன் அங்கீகாரமின்றி உரிய வீதங்களிலும் குறைந்த வீதங்களை பயன்படுத்தி கிராம எழுச்சி வேலைத் திட்டத்தின் கீழ் 06 வேலைகளிற்காக ரூபா 12,800,650 குறைவாக மதிப்பீடு தயாரித்து குறித்த நிர்மாணம் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | இவ் 06 வேலைகளை தவிர, ஏனைய 07 வேலைகளினூடாக இலாபம் ஈட்டியுள்ளதாக அறிவிக்கிறேன். | ஒப்பந்த கிரயத்தையேனும் ஈட்டிக் கொள்ளும் வகையில் மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டியமை |